2011 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுப்படுத்துகின்ற பணிகளுக்குப் பல இடங்களிலே உடனடியாக அனுமதியைப் பெற்று, அந்தச் சாலைகள் எல்லாம் தங்குதடையின்றி வனப் பகுதியிலேகூட அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலையின் சீரமைப்புப் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டு அது சீரமைக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி அகலப்படுத்துவதற்கான அந்தப் பணிக்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருந்தால், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல நாங்கள் நினைத்தால் நாங்களே அனுமதியைக் கொடுத்துவிட முடியாது. அதை உரிய அதிகாரிகளிடம் அனுப்பி, அதாவது அது மத்திய அரசின் பெங்களூரு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுமோ அல்லது மத்திய அரசின் டெல்லி அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுமா என்று அறிந்து அனுப்பி அதற்கான அனுமதியை நாங்கள் பெற்றுத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

16—

அகலப் பாதை

*10183—திரு. ஆர். சிவானந்தம்:

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு—ஆரணியை இணைக்கும் ஒருவழிப் பாதையை அகலப் பாதையாக மாற்றும் பணியினைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய சாலையில் ஆற்காடு முதல் திருவாரூர் வரை உள்ள 378 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை முழுவதையும் இருவழிப் பாதையாக அகலப்படுத்தும் பணி ரூ.611.70 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-01 தொகுப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டு, நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. சட்டமன்ற வினாவில் குறிப்பிட்ட ஆற்காடு—ஆரணி சாலையானது மூன்றாம் பிரிவில் உள்ளடங்கியுள்ளது. ஆற்காடு முதல் ஆரணி வரை உள்ள 24.62 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் தற்போது முடிக்கப்பட்டுவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி—ஆற்காடு சாலையை, சென்னை—கிருஷ்ணகிரி என்.எச். சாலையோடு ஆற்காட்டில் இணைக்கும் சாலை மிகவும் நெருக்கடியாக உள்ளது. ஆற்காடு நகராட்சியைக் கடந்து செல்ல மிகவும் கால தாமதம் ஏற்படுகிறது. எனவே, ஆரணி சாலையை, சென்னை—கிருஷ்ணகிரி என்.எச். சாலையோடு இணைக்க ஆற்காடு புறவழிச் சாலை ஒன்றை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: உலக வங்கியினுடைய நிதி உதவியோடு மாநில அரசின் நிதிப் பங்களிப்பையும் செலுத்தி இந்தச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஆற்காடு முதல் திருவாரூர் வரை அந்தச் சாலை ஏறத்தாழ 378 கிலோ மீட்டர் சாலை. அதிலே வரக்கூடிய நகர்களுக்கான புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் எல்லாம் இறுதிக் கட்டத்தை முடித்து, சாலை பயன்பாட்டில் இருக்கிறது. இதில் திட்ட மதிப்பீடு தயாரிக்கிறபோது ஆற்காடு நகருக்கான புறவழிச் சாலையைச் சேர்க்கக்கூடிய பணியானது விடுபட்டுவிட்டது. எனவே, மாண்புமிகு

2011 பிப்ரவரி 7]

உறுப்பினர் அவர்களால் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன் நம்முடைய புறவழிச் சாலை அமைக்கும் பணிகளுக்கான அறிவிப்பிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு ஆற்காடு நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பதற்கான திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்போது அதிலே நில எடுப்பு தேவைப்படுகிறது. எனவே, அந்தப் பணி நடைபெற்று வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய தேசிய நெடுஞ்சாலை எண் 46–இலிருந்து பிரிந்து ஆற்காடு–ஆரணி–விழுப்புரம் சாலையை மாநில நெடுஞ்சாலையில் இணைக்கக்கூடிய வகையிலே சுமார் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு அந்தச் சாலை அமைக்க வேண்டி இருக்கிறது. அதற்கான நில எடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. விரைவாக அந்தப் புறவழிச் சாலை அமைந்து அந்தப் பகுதியிலே போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வழிவகை செய்யலாம்.

திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆற்காடு–ஆரணி சாலையில் அதிகப்படியாக உள்ள வேகத் தடைகளை அகற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு வினாவிற்கு பதிலளிக்கிற நேரத்திலே வேகத் தடைபற்றி நான் குறிப்பிட்டேன். தேசிய நெடுஞ்சாலையிலே வேகத் தடை அனுமதிக்கப்படுவதில்லை. சில இடங்களிலே அந்தப் பகுதி பொதுமக்களுடைய வேண்டுகோளின்படி அமைக்கப்படுகிறது. பள்ளிகள், கல்லூரிகள், அதேபோல மருத்துவமனைகள், பொதுமக்கள் அதிகமாக நடமாடக்கூடிய இடங்களிலே வாகனங்கள் வேகமாக வருகிற காரணத்தினால் விபத்துகள் ஏற்படுகின்றன என்று பல்வேறு புகார்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்களுக்கு வந்தவுடன், அவற்றை அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பி வைக்கிறார்கள். அவை குறித்து தீவிரமாக விசாரித்துத்தான் முடிந்த அளவு வேகத் தடையைக் குறைத்து அமைக்கிறோம். அதேநேரத்திலே வாகனங்களுடைய வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை நெடுஞ்சாலைத் துறை மூலமாக எடுப்பதற்காக வேகத் தடை அமைக்கிறோம். காவல் துறையின்மூலமாக தடுப்புகள் அமைத்துக்கூட அந்த வேகத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். அதுபோல, தேவையற்ற இடத்திலே இருக்குமானால் அதை உரிய முறையிலே பரிசீலிக்கலாம்.

[2011 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதியில் அடங்கியுள்ள தாம்பரம் தொகுதியில் கழக அரசின் சார்பாக தலைவர் கலைஞர் அவர்கள் எண்ணற்ற சாலைகளையும், மேம்பாலங்களையும் அமைத்துத் தந்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் நேரிடையாகப் பல சாலைகளையும், மேம்பாலங்களையும் பார்வையிட்ட பெருமை தாம்பரம் தொகுதிக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நன்றியோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாம்பரம் தொகுதியில் ஒரே ஒரு சாலை குறிப்பாக ஜி.எஸ்.டி. சாலை பல்லாவரத்திலிருந்து குன்றத்தூர் செல்கின்ற அந்த ஒரு சாலை. குறிப்பாக பம்மலிலேயிருந்து அனகாபுத்தூர் வரையுள்ள அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, தாம்பரம் மேம்பாலப் பணிகளில் 90 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துவிட்டன. மீதிப் பணிகள் எப்போது முடிவடையும்; எப்போது திறப்பு விழா நடைபெற இருக்கிறது என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விரிவாக்கப் பணி தேவை என்பது குறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள். அது குறித்து விசாரித்து போக்குவரத்தினுடைய சூழலைக் கருதி, அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும். அதேபோல, தாம்பரத்திலே இரயில்வே கடவில் அமைக்கப்படுகிற சாலை மேம்பாலப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டிக்கொண்டிருக்கின்றன. வேளச்சேரி சாலையை இணைக்கக்கூடிய பகுதியில் நில எடுப்புப் பணி தேவைப்பட்ட காரணத்தினால் அதற்குரிய இறுதிப் பணியும் நடைபெற்று வருகிறது. அதற்கு முன்பு சென்னையிலிருந்து தாம்பரம் மற்றும் முடிச்சூர் போன்ற முக்கிய பகுதிகளுக்குப் பிரிந்து செல்லக்கூடிய இடங்களிலெல்லாம் பணிகள் முடிவுற்றுவிட்டன. இந்த மாத இறுதியில் ஒரு பகுதி போக, மீதி

2011 பிப்ரவரி 7]

இருக்கக்கூடிய பகுதிகளை பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலையாக மாறியதற்குப் பின்னால், ஏற்கெனவே இருக்கின்ற சாலைகளெல்லாம் அந்தக் கிராமங்களின் வழியாகச் செல்கின்ற சாலையாக இருக்கின்றதனால் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அதைப் பராமரிப்பது மாநில நெடுஞ்சாலைத் துறையா அல்லது தேசிய நெடுஞ்சாலைத் துறையா, அதைப் பராமரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்பதோடு கிராமங்களிலிருந்தும் மாநில நெடுஞ்சாலைகளிலிருந்தும் நான்கு வழிச்சாலைகளில் இணைகின்ற பகுதிகளிலே நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. தேவைக்கேற்ப தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக அல்லது 10 மீட்டர் அகலம் கொண்ட 6 வழிச் சாலைகளாக மாற்றுகின்ற நேரத்திலே ஒரு உதாரணத்திற்கு திண்டிவனம் நகரம் இருக்கிறது என்று சொன்னால், அதைத் தவிர்த்துவிட்டு வெளியிலே புறவழிச் சாலை அமைத்து நேர்பாட்டை மாற்றியமைக்கும்பட்சத்திலே, ஏற்கெனவே இருக்கக்கூடிய சாலையின் பராமரிப்புக்கு மாநில அரசு அனுமதி வழங்க வேண்டும்; இந்தச் சாலைக்கு நாங்கள் மாற்றுச் சாலை அமைத்து விட்டோம்; இந்தச் சாலையை நீங்கள் பராமரித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அப்படி எந்தத் தகவலும் இதுவரை துறைக்கு வருவதில்லை. இருந்தாலும் சாலை பராமரிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்திலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கடி அறிவுறுத்துகிற காரணத்தினால், அதை நாங்களே கேட்டுப் பெற்று, இந்த மாதிரி நீங்கள் மாற்றுச் சாலை அமைத்துக்கொண்டிருக்கிறீர்கள், இந்தச் சாலையை நாங்கள் எடுத்துப் பராமரிப்பதற்குத் தடையில்லாச் சான்று

வழங்கவேண்டுமென்று கேட்டு, அதுபோன்ற சாலைகளைப் பெற்று மாநில அரசால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய கிராமச் சாலைகள் வருகிற நேரத்திலே வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலையிலே வேகமாகச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. உள்ளேயிருந்து வரக்கூடியவர்கள் எதிர்பாராதவிதமாக விபத்திலே சிக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படுகிறது என்பதற்காக அதையும் இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு அறிவுறுத்தியிருக்கிறோம். உள்ளிருந்து வரக்கூடிய சாலைக்கு சிறு வேகத் தடையும், எச்சரிக்கைப் பலகையும் அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அதுபோன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநில அரசாலும் நிதிகள் ஒதுக்கப்பட்டு அதுபோன்ற விபத்துப் பகுதிகள் சரிசெய்யப்பட்டு வருகின்றன. மாநில நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய கிராமச் சாலைகளில்கூட மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து நிதி பெற்று இப்போது அதுபோன்ற மேம்பாடு செய்து வருகிறோம். எனவே, விபத்துகள் இப்பொழுது குறைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *17*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

17—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***117248—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,